டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.11.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 131 - Madurai | Online Edition

# தமிழகத்தில் அதி கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.26

மலாக்கா ஜல சந்தி, தெற்கு அந்தமானை ஒட்டிய கடல் பகுதியில் சென்யார் புயல் உருவானது. சென்யார் புயலால் தமிழ்நாட்டிற்கு எந்த பாதிப்பும் இருக்காது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் தாழ்வுப் பகுதி, நவம்பர் 29ம் தேதி புயலாக மாறக்கூடும்.

இது புயலாக உருவெடுக்கும் பட்சத்தில் ’டிட்வா’ என பெயரிடப் படும் என்றும் டிட்வா புயலால் தமிழகத்திற்கு நவம்பர் 29, 30ம் தேதிகளில் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.



# மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடியில் உயர் விளைச்சல் பெறும் விவசாயிக்கு ரூ.5 இலட்சம் சிறப்பு பரிசு



புதுக்கோட்டை, நவ.26

மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடியில் அதிக உற்பத்தித் திறன் பெறும் விவசாயிக்கு சி.நாரயாணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறன் விருது முதலமைச்சரின் சிறப்பு பரிசு ரூ.5 இலட்சம் மற்றும் பதக்கம் ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இவ்விருதினை பெற்று பயன்பெற விண்ணப்பிக்குமாறு வேளாண்மை இணை இயக்குநர், மு.சங்கரலட்சுமி அழைப்பு விடுத்துள்ளார்.

நடப்பு 2025-26 ஆம் ஆண்டு திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்து மாநில அளவில் நடைபெறும் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டு அதிக உற்பத்தித் திறன் பெறும் விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் ரூ.5 இலட்சம் சிறப்பு பரிசு மற்றும் ரூ.7,000/- மதிப்புள்ள பதக்கமும், தமிழ்நாடு முதலமைச்சரால் குடியரசு தின விழாவில் வழங்கப்படும்.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இந்த சிறப்பு பரிசினை பெறும் வகையில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி மேற்கொண்டு மாநில அளவில் அதிக மகசூல் பெற்று பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பயிர் விளைச்சல் போட்டியில் பங்குபெறும் விவசாயிகள் குறைந்தபட்சம் 2 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மேலும் அவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திருத்திய நெல் சாகுபடி செய்த முன்னோடி விவசாயியாக இருக்க வேண்டும்.

● நடைமுறையில் உள்ள இதர மாநில மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளில் நெல் பயிரில் கலந்து கொள்ள பதிவு செய்த விவசாயி இச்சிறப்பு விருதுக்கு பதிவு செய்ய இயலாது.

● ஒரு முறை பயன்பெறும் விவசாயி அடுத்த மூன்று ஆண்டு களுக்குப் போட்டியில் கலந்து கொள்ள இயலாது.

● நில உரிமைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள தகுதியுடையவர்கள் ஆவர்.

● பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் ரகங்களை மட்டுமே பயிர் செய்திருக்க வேண்டும்.

● பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள கட்டணமாக ரூ.150/- செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

● இப்போட்டியில் கலந்து கொள்ள 31.03.26 தேதிக்குள் கட்டணம் செலுத்தி பதிவு செய்துக் கொள்ள வேண்டும். போட்டியில் கலந்து கொள்பவர்கள் 15 நாட்களுக்கு முன்னதாக அறுவடை தேதியை தெரிவிக்க வேண்டும். அறுவடையினை 15.04.26-க்குள் முடிக்க வேண்டும்.

● விண்ணப்பத்துடன் பயிரிடப்பட்ட பரப்பின் சான்று ஆவணங் களான சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றை கட்டாயமாக இணைக்க வேண்டும்.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நாராயணசாமி நெல் உற்பத்தி திறன் விருது பெறுவதற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி அழைப்பு விடுத்துள்ளார்.






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் ஆராய்ச்சி திடலில் ஆய்வு




திருச்சி, நவ.26

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்ந்த திட்டங்கள் பற்றி வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம், ராஜசேகர் ஆய்வு மேற்கொண்டார். வேளாண்மை துறையின் கீழ் செயல்படும் மத்திய திட்டங்களான தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், அணுசாரணை ஆராய்ச்சி திடல் மற்றும் வேளாண்மை தொழில்நுட்பம் மேலாண்மை முகமை அட்மா திட்டம் போன்ற திட்டங்களை ஆய்வு செய்தார்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கள்ளிகுடி (வடக்கு) கிராமத்தை சேர்ந்த ராஜேஸ்வரன், றீ/லி சுந்தரம் என்ற விவசாயி நெல் இயந்திரம் மூலம் நடவு செய்த திடலை பார்வையிட்டு நடவு இயந்திரத்திற் குண்டான வாடகை குறித்து கேட்டறிந்து நெல் இயந்திர நடவு பயன்பாடு பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டங்களை ஆய்வு செய்து செயல் விளக்கம் இனத்தின் கீழ் மாணிக்கம் என்ற விவசாயிக்கு ஊறுகாய் புல் தீவன தயாரிப்பு செயல்விளக்கம் மற்றும் தாது உப்பு முழு மானியத்தில் வழங்கி அதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார். கள்ளிக்குடி வடக்கு கிராமத்தில் அமைத்துள்ள அணுசாரணை ஆராய்ச்சி திடலை பார்வையிட்டார்.

ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர் ஊராணி, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் நாகராஜன் மற்றும் வேளாண்மை அலுவலர் கனிமொழி வேளாண்மை உதவி அலுவலர்கள் பழனிசாமி, பிரபாகர் மற்றும் ATMA BTM செல்வி, ATM சிலம்பரசன் உடன் இருந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# தோட்டக்கலை பயிலும் மாணவர்களுக்கு பட்டறிவு பயணம்



திண்டுக்கல், நவ.26

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவர்களுக் கான பட்டறிவு பயணம் நடைபெற்றது.

இப்பயணம் காய்கறி மகத்துவ மைய முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு தோட்டக்கலை பயிலும் மாணவர்களை ரெட்டியார் சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி முன்னிலையில் இயற்கை விவசாய வாஹா பண்ணைக்கு அழைத்து செல்லப்பட்டது. அங்கு இயற்கை விவசாய முறை களையும் அதன் பயன்களையும் மாணவர்களுக்கு எடுத்து கூறினார். வாஹா இயற்கை பண்ணையில் இயற்கையான முறை யில் எண்ணெய் எடுத்தல், பீட்ரூட் மால்ட் தயாரித்தல், நாட்டு மாடுகளை வைத்து மண்புழு உரம் தயாரிப்பு, செயற்கை முறை யில் டிரையரை பயண்படுத்தி காய்கள், தேங்காய் மற்றும் பீட்ரூட் இவைகளை உலர வைத்து பவுடராக பதப்படுத்தும் முறை, அது தவிர தேங்காய் எண்ணெய் எடுப்பதற்காக கல் எண்ணெய், செக்கு இயந்திரத்தையும் காண்பித்து விளக்கம் கூறினர். பண்ணை குட்டை அமைப்பது அதன் பயன் மீன் வளர்ப்பு முறை பற்றி மாணவர்களுக்கு எடுத்து கூறப்பட்டது. அங்கு மூலிகை பயிர்கள் அமைந்திருந்ததையும் மாணவர்களுக்கு எடுத்து காட்டினர். இப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர் பொன் தமிழரசு ஆகியோர் சிறப்பாக செய்து இருந்தனர்.



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நவீன வேளாண்மையில் கோழிப்பண்ணைக் கழிவுகளும் உரம் தயாரிப்பு முறைகளும்

இயற்கையான முறையில் கிடைக்கப்பெறும் உரங்களை பயிர்களுக்கு பயன்படுத்தும் முறையை நமது உழவர்கள் ஆதிகாலம் தொட்டே பின்பற்றி வருகிறார்கள். அதிமுக்கியமாக தாங்கள் வளர்க்கும் கால்நடைகள் மூலம் கழிவுகளை உரமாக்கி விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்கி வருகிறார்கள். அத்தகைய கால்நடைக் கழிவு உரங்களில் கோழிகளின் கழிவு உரங்கள் மிகுந்த பயனளிப்பவை. இந்த உரங்கள் பல்வேறு விதங்களில் தயாரிக்கப்படுகிறது. அவை குறித்து சற்று சுருக்கமாக பார்ப்போம்.

**மக்கிய உரம் தயாரிக்கும் முறை**

குறிப்பிட்ட அளவில் கோழி எச்சங்கள் சேகரிக்கப்பட்டு, துண்டாக்கப்பட்ட வைக்கோல் உடன் கலக்கப்படுகிறது. ஒரு டன் கழிவுகளுடன் 250 கிராம் அடங்கிய 5 பாக்கெட்டுகள் சிப்பிக்காளான் விதை உட்செலுத்தப்பட்டு, பின்பு கோழி எரு மற்றும் வைக்கோல் கலவை நிழலின் கீழ் குவியலாக்கப் படுகிறது. குவியலின் ஈரப்பதம் 40-50 சதவீதம் இருக்குமாறு பராமரிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் தெளிப்பதுடன் 21, 35, 42 ம் நாளில் நன்றாகக் கிளறி விட வேண்டும். இவ்வாறு செய்வதின் மூலம் 50 நாட்களுக்குள் கோழிப்பண்ணைக் கழிவு மற்றும் வைக்கோல் கலவையானது முழுமையான மக்கிய உரமாக மாற்றப்படுகிறது.

இந்த மட்கிய உரத்தில் தழைச்சத்து 1.89 சதவீத அளவிலும், மணிச்சத்து 1.83 சதவீத அளவிலும் சாம்பல் சத்து 1.34 சதவீத அளவிலும், கரிம - தழைச்சத்து 12.20 என்ற விகிதத்திலும் அடங்கியுள்ளன.

**நார்க்கழிவு மற்றும் சிப்பிக் காளான் விதை மூலம் மக்கிய உரம் தயாரிக்கும் முறை**

குறிப்பிட்ட அளவு புதிய கோழிப்பண்ணைக் கழிவுகளை சேகரித்து, மக்குவதற்கு ஏதுவாக கரிமம் - தழைச்சத்தின் விகிதம் 25-30 உள்ளவாறு, உலர்ந்த நார்க்கழிவுடன் 1:15 விகிதத்தில் கலக்கப்படுகிறது.

சிப்பிக்காளான் விதை ஒரு டன் கழிவுப் பொருளுக்கு 2 பாக்கெட்டுகள் என்ற விகிதத்தில் சேர்த்து பின் கலவை நிழலின் கீழ் குவியலாக்கப்படுகிறது. குவியலின் ஈரப்பதம் 40- 50 சதவீதம வரை பராமரிக்கப்பட்டு 21, 28 மற்றும்35 ம் நாளில் இடைவிடாமல் கிளறிவிட வேண்டும். 28ம் நாள் கிளறும்போது சிப்பிக்காளன் விதை மீண்டும் ஒரு டன்னுக்கு 2 பாக்கெட்டுகள் சேர்க்கப்பட வேண்டும். 45 நாட்களில் நன்கு தரம் உள்ள மக்கிய உரம் பெறப்படுகின்றது. இந்த மக்கிய உரத்தில் தழைச்சத்து, 2.08 சதவீத அளவிலும், மணிச்சத்து 2.61 சதவீத அளவிலும், சாம்பல்சத்து 0.94 அளவிலும், கரிம–தழைச்சத்து 13.54 என்ற விகிதத்திலும் உள்ளன.

**கூண்டு அமைப்பின் கீழ் குழி அமைத்து மக்கிய உரம் தயாரிக்கும் முறை**

கூண்டு அமைப்பின் கீழ் குழி உருவாக்கி அதில் 5 செ.மீ மணலையும் 10 செ.மீ–க்கு நார்கழிவுகளையும் நன்றாக பரப்பிவிட வேண்டும். இதில் கோழி எச்சம் சேகரிக்கப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு பின் ஓரளவு சிதைவடைந்த நார்க்கழிவு கோழி எச்சக்கலவையை எரு கொட்டகைக்கு மாற்றி நிழலின் கீழ் குவியலாக்க வேண்டும். குவியலின் ஈரப்பதத்தின்அளவு 48–50 சதவீதம் வரை இருக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை இடைவிடாமல் கிளறிவிட வேண்டும்.

இந்தக் கலவையானது மற்றுமொரு 30 நாட்கக்கு மட்க வைக்கப்படுகிறது. 120 நாட்களுக்குள் நன்கு மக்கிய சத்துள்ள உரம் கிடைக்கிறது. இந்த மக்கிய உரத்தில் தழைச்சத்து 2.08 சதவீத அளவிலும், மணிச்சத்து 1.93 சதவீத அளவிலும், கரிம – தழைச் சத்து விகிதம் 10.16 என்ற விகிதத்திலும் இருக்கும்.

**குப்பைக்கூழ் படிவுகள் மூலம் மக்கிய உரம் தயாரிக்கும் முறை**

கோழிப்பண்ணையில் தரையின் மேற்புறம் 5–10 செ.மீ உயரம் வரை உலர்ந்த நார்க்கழிவினை அடுக்குகளாக பரப்பி, இதன் மேல் பறவைகள் வளர்க்கப்பட்டு எச்சங்கள் சேகரிக்கப் படுகின்றன. மூன்று மாதங்களுக்குப் பின் ஓரளவு சிதைவடைந்த நார்க்கழிவு, கோழி எச்சங்கள் மற்றும் இறகுகள் எரு கொட்டகைக்கு மாற்றப்படுகிறது.

தகவல் ; **யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலைப்பேட்டை.**

# உழவர் விவாதக்குழு அமைப்பாளர் பயிற்சி



திருச்சி, நவ.26

திருச்சி மாவட்டம், வேளாண்மைத் துறை, உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 2025-26 ஆம் ஆண்டு உழவர் விவாதக் குழு அமைப்பாளர் பயிற்சி இராஜசேகரன், வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்), திருச்சி முன்னிலையில் 26.11.25 அன்று திருச்சி, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியினை வேளாண்மை இணை இயக்குநர், பூ.வசந்தா தலைமை தாங்கி துவக்கி வைத்து உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களின் செயல்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்து கூறினார். இப்பயிற்சியில் வையம்பட்டி, மருங்காபுரி, அந்தநல்லூர் ,மணப்பாறை, மண்ணச்சநல்லூர் வட்டாரத்தை சார்ந்த உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். நாகராஜன், வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்), திருச்சி, இயற்கை வேளாண்மை குறித்தும், உயிர் உரங்களின் முக்கியத்துவம், உயிர் கட்டுப்பாட்டு காரணி களை கொண்டு பயிர் நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப் படுத்துவது குறித்து எடுத்துக்கூறி செயல் விளக்கம் அளித்தார்.

மேலும் இப்பயிற்சியில் பயிர் காப்பீட்டு பிரிவு வேளாண்மை உதவி இயக்குநர் புஷ்பா சிவக்குமார், ராபி பருவ பயிர் காப்பீடு திட்டத்தினை பற்றி கூறி உழவர்களை பயிர் காப்பீடு செய்ய கேட்டுக்கொண்டார். குலசேகரன், வனச்சரக அலுவலர், வனத்தறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார். கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர் ராஜசேகர், மழை காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் பராமரிப்பு பற்றி கூறினார். முனைவர் ஜானகி, வேளாண் விஞ்ஞானி, வேளாண் அறிவியல் நிலையம், சிறுகமணி ராபி பருவ பயிர் பாதுகாப்பு பற்றி கூறினார். விதை சான்றுத்துறை, விதை ஆய்வாளர், மோகன்தாஸ், தனியார் விதை நிறுவனங்க ளிடமிருந்து தரமான விதைகளை வாங்குவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

லெட்சுமிகாந்தன், விதைச்சான்று அலுவலர், இயற்கை விவசாயிகள் அரசு சான்று பெறுவது குறித்து விளக்கமாக கூறினார். நவிதா, வேளாண்மை அலுவலர், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் மூலம் வங்கிகளில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்களை பற்றி கூறினார். பட்டு வளர்ச்சித்துறை, ரேணுகா, இளநிலை உதவி ஆய்வாளர், பட்டு வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படும் திட்டம் மற்றும் பயிற்சி பற்றி கூறினார். பயிற்சியில் பங்குப் பெற்ற அமைப் பாளர்களுக்கு வேளாண் திட்டங்கள் குறித்த தொழில்நுட்ப கையேடு மற்றும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.




# தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்- ஒரு பார்வை




நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கில் இந்த புதிய மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, படித்த வேலை இல்லாத பெண்களை ஒரு தொழில் முனைவோராக (WOMEN ENTREPRENEURS) மாற்றி அவர்களின் குடும்ப வாழ்வாதார சிறக்கவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு உள்ளது என்பதை வெளியூலகத்திற்கு உணர்த்திட இத்திட்டம் உறுதுணையாக இருக்கும்.

**இத்திட்டத்தில் யார் யார் பயன் பெறலாம்?**

இந்த திட்டத்தில் பயன்பெற பெண்களால் மட்டுமே முடியும். அதுவும் 18 வயது முதல் 55 வயதுடையவர்களே தகுதியானவர்கள். இத்திட்டத்தில் 10 லட்சம் வரை 25% மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி வழங்குவதுடன், தொழில் வளர்ச்சிக்கு தேவையான தொழில்நுட்பம் (SKILL TECHNOLOGY), சந்தைப் படுத்தல் (MARGETING), உள்ளிட்ட அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.

**என்ன என்ன தொழில் செய்யலாம்?**

கீழ்க்கண்ட தொழில்களில் தொழில் தொடங்க முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவையாவன :

1) விவசாய கழிவுகளில் இருந்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருள் தயாரித்தல்

2) தென்னை நார் கழிவு மூலம் செடி வளர்க்க (நர்சரி) உருவாக்குதல்

3) காகித கழிவுகளிலிருந்து பென்சில் தயாரித்தல்

4) ஆடை வடிவமைப்பு

5) அலங்கார அணிகலன்கள் தயாரிப்பு

6) கண்ணாடி ஓவியம், கண்ணாடி பொருட்கள் தயாரிப்பு

7) பட்டு நூல் அணிகலன் தயாரிப்பு மற்றும்

**கீழ்க்கண்ட நிலையங்களை நடத்துதல்**

1) யோக பயிற்சி மையம்

2) வளர்ப்பு பிராணி பாரமரிப்பு நிலையம் அமைத்தல்

3) மணப்பெண் அலங்கார பொருட்கள் வாடகை நிலையம்

4) சத்து மாவு பேக்கரி கடை நடத்துதல்

5) குழந்தைகள் பாரமரிப்பு நிலையம்

6) வாசனை எண்ணெய் தயாரித்தல் (எலுமிச்சை புல், வெட்டி வேர், பாமரோசா புல்)

போன்ற தொழில்களில் தொழில் முனைவோராக பெண்கள் மாறிட இத்திட்டம் உதவும்.

**தொழில் தொடங்க என்னென்ன ஆவணங்கள் தேவை?**

புகைபடம், கல்விதகுதி, ஆதார் எண், சாதி சான்றிதழ், விலை புள்ளி பட்டியலுடன் www.msmeonline.tn.gov.in (TWEETS) என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

**மகளிர் தொழில்முனைவோராகமாற மற்ற திட்டங்கள் என்ன?**

1) முத்ரா திட்டம் (MUDRA SCHEME)

2) தொழில் முனைவோர் திட்டம் (SUEP)

3) புதிய தொழில் முனைவோர் திட்டம் மற்றும் தொழில் நிலை மேம்பாட்டு திட்டம் (NEEDS)

4) மகளிருக்கான தொழில் முனைவோர் கடன் (EDCC BANK)

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அந்தந்த மாவட்டத்தில் தொழில் மைய பொது மேலாளரை தொடர்பு கொள்ளலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நெல்லில் அதிக வெப்பநிலைத் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள்

● இலை வழித் தெளிப்பாக 3 சதவிகிதம் கயோலின் (Kaolin) அல்லது 1 சதவிகித பொட்டாசியம் குளோரைடு (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம்) கரைசலை குறிப்பிட்ட வளர்ச்சி பருவம் முறையே தூர் கட்டும், கதிர் உருவாகும் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

● பி.பி.எப்.எம். (மெத்தைலோ பாக்டீரியம்) நுண்ணுயிர் உரம் (PPFM) பயன்படுத்த வேண்டும். (விதை நேர்த்தி செய்ய 5 கிலோ விதைக்கு 200 கிராம், அடியுரமாக மண்ணில் இட எக்டருக்கு 2 கிலோ, இலை வழி தெளிப்பாக எக்டருக்கு 500 மில்லி லிட்டர் வீதம் கதிர் உருவாகும் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்).

● இலை வழி தெளிப்பாக 2 சதவிகிதம் மோனோ அமோனியம் பாஸ்பேட் மற்றும் 1 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை, பூப்பதற்கு 15 நாட்கள் முன்பாக மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிப்பதன் மூலம் தானிய எடை மற்றும் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

● குறுவை பட்டத்தில் இலை வழித் தெளிப்பாக 1 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு + 500 பிபிஎம் சைக்கோசெலை (CCC) பயிர் வளர்ச்சி பருவத்தில் (தூர் கட்டுதல் மற்றும் கதிர் உருவாகுதல்) தெளிக்க வேண்டும்.

இத்தகவலை சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# காய்கறிப் பயிர்களுக்கான இயற்கை விதை நேர்த்தி முறைகள்

ஊட்டி, நவ.26

நீலகிரி மாவட்டத்தில் பிரதானமாக பயிரிடப்படும் காய்கறி விதைகளை இயற்கை முறையில் விதை நேர்த்தி செய்வதன் மூலம் நோய்களை கட்டுப்படுத்தி விதைகளின் தரத்தை உயர்த்தி நஞ்சில்லாமல் அதிக மகசூல் பெற்று விவசாயகள் பயன் பெறலாம். மேலும், விதை நேர்த்தி மூலம் தரமான விதைகள் கிடைப்பதால் வயல்களில் விதைக்கும் விதையின் அளவும் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டு இடுபொருள் செலவை குறைக்கலாம்.

## நீர்/திரவ விதை நேர்த்தி

விதைகளை தண்ணீரை கொண்டு இரு முறைகளில் விதை நேர்த்தி செய்யலாம். முதலாவதாக,விதைகளை நீரில் 8 முதல் 12 மணி நேரம் ஊரவைப்பதன் மூலம் விதையின் உடலியல் காரணிகள் தூண்டப்பட்டு முளைப்புத் திறன் வேகம் எடுத்து, அனைத்து விதைகளும் சீராக முளைப்பது உறுதி செய்யப் படுகிறது. இரண்டாவதாக, 55°C வெப்பம் உள்ள நீரில் 20 முதல் 30 நிமிடம் விதைகளை ஊரவைப்பதால், விதைகளின் மேல் பரப்பிலும் விதை தொல்லியின் அடியிலும் இருக்கும் நோய் ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள் அழிக்கப்பட்டு விதை மூலம் பரவக்கூடிய நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இம்முறையில் விதை நேர்த்தி செய்யும் போது நீரின் வெப்பம் 55°C-யை மிகாமல் இருப்பது அவசியம், இல்லையேல் அதிக வெப்பத்தின் காரணமாக விதைகள் சேதமடைந்து முளைப்புத்திறன் பாதிக்கப் படும். 3 நாட்கள் நன்கு புளித்த மோரில் விதைகளை நன்றாக கலந்து 30 நிமிடம் ஊரவைத்து பின் நிலலில் உலர்த்தி விதைப்பதால் விதைகள் சீராகவும் வீரியமாகவும் முளைப்பதை காண முடியும். மேலும் 2% ஜீவாமிர்தம் அல்லது பஞ்சக் காவியாவுடன் 6 மணி நேரம் ஊரவைத்து விதைப்பதன் மூலம் பயிர்களின் நோய் எதிர்ப்பு திறன் தூண்டப்பட்டு சீராக முளைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### உயிரியல் சார்ந்த விதை நேர்த்தி

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகலான ட்ரைக்கோடெர்மா மற்றும் சூடோமோனாஸ் ப்லோரசன்ஸ் அல்லது பேசிலஸ் சப்டிலீஸ் ஆகியவற்றை 1 கிலோ விதைக்கு தலா 4 கிராம் வீதம் நன்றாக கலந்து விதைப்பதால் பயிர்களை தாக்கக் கூடிய நோய்களை நீண்டகாலம் கட்டுப்படுத்தலாம்.

மேலும் உயிர் உரமான அசோஸ்பைரில்லம் 1 ஹெக்டர் விதைக்கு 600 கிராம் என்ற வீதம் வடிகட்டி ஆர வைத்த கஞ்சியுடன் கலந்து 30 நிமிடம் ஊரவைத்து நிலலில் உலர்த்தி விதைப்பதன் மூலம் யூரியா இடுவதை குறைத்து மகசூலை பெருக்கலாம். மேலும், குறிப்பாக உயிரியல் விதை நேர்த்தி செய்த விதைகளுக்கு இரசாயன விதை நேர்த்தி செய்யக்கூடாது. மேலே குறிப்பிட்ட இயற்கை முறைகளை பயன்படுத்தி விதை நேர்த்தி மூலம் நஞ்சில்லா உணவை உற்பத்தி செய்யலாம் என உதகை, விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் நவீன் அறிவுறுத்தினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# விதையின் தரம் அறிந்து விதைத்திட விதைப்பரிசோதனை அலுவலர் அழைப்பு!

திருச்சி, நவ.26

கார்த்திகை பட்டத்தில் தேவையான விதையின் தரத்தை அறிந்து சாகுபடி செய்திட திருச்சி விதைப்பரிசோதனை அலுவலர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், கார்த்திகை பட்டத்தில் உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, கம்பு, சூரியகாந்தி, எள் மற்றும் நெல் (பின் சம்பா) போன்ற பயிர்கள் சாகுபடி செய்யும் போது விதையின் தரத்தினை தெரிந்து கொண்டு தரமான விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெறலாம். விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் கீழ் திருச்சி, விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிற ரகக் கலப்பு ஆகிய நான்கு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. விதை உற்பத்தி யாளர்கள், விதை விற்பனையாளர்கள் மட்டுமின்றி விவசாயி களும் தங்களிடம் உள்ள விதையின் தரத்தை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு அலுவலக வளாகம், தரை தளம், புத்தூர் நான்கு ரோடு, திருச்சி –17 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/– கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து அறிந்து கொள்ளலாம்.

விதையின் முளைப்புத் திறனை தெரிந்து கொண்டு விதையளவை முடிவு செய்யலாம். விதையின் ஈரப்பதத்தை தெரிந்து கொண்டு சரியான ஈரப்பதத்தில் விதையினை சேமித்து வைக்கும் போது பூச்சி நோய் தாக்குதல் ஏற்படாமல் பாதுகாக்கலாம். பிறரக கலப்பு பரிசோதனையின் மூலம் வேறு ரக விதைகள் கலந்துள்ளதா என தெரிந்து கொண்டு விதையின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

தற்போது பருவமழை பெய்து வருவதால் விவசாயிகள் விதைப்பதற்கு முன் விதை பரிசோதனை செய்து விதையின் தரத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் இரா.புவனேஸ்வரி ஆகியோர் தெரிவிக்கின்றார்கள்.

# கால்நடைப் பண்ணைகளில் பதிவேடுகள் பராமரிப்பு அவசியம்

ஒரு கால்நடைப் பண்ணை (மாட்டுப் பண்ணை, ஆட்டுப் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை) வெற்றிகரமாகவும் இலாபகர மானதாகவும் நடைபெறுவதற்கு தரமான கால்நடைகளை வாங்குவது, கொட்டகை அமைப்பது மற்றும் இதர பராமரிப்பு முறை களான தீவன பராமரிப்பு, இனப்பெருக்க பராமரிப்பு மற்றும் நோய் பராமரிப்பு போன்றவை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ




அதே போன்று அவற்றுக்கான பதிவேடு களை பண்ணையில் பராமரிப்பதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

**பதிவேடுகளின் முக்கியத்துவம்**

**1. பண்ணையின் செயல்பாடுகளைக் கண்டறிதல்**

பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம் விவசாயிகள் தங்களிடம் இருக்கும் கால்நடைகளின் எண்ணிக்கை, கால்நடைகளின் வளர்ச்சி விகிதம், உடல் எடை, இனப்பெருக்க விகிதம், ஆரோக் கியம், அளிக்கப்படும் மருத்துவம், தீவன இருப்பு, தீவனச் செலவு, மருத்துவச் செலவு, வரவு செலவு போன்ற பல்வேறு குறிப்புகளை பதிவேடுகள் மூலம் உடனுக்குடன் கண்காணித்து பகுப்பாய்வு செய்வதன் மூலம், தமது கால்நடைப்பண்ணைத் தொழில் சிறப்பாக செயல்படுகிறதா, கால்நடைகளின் இனப் பெருக்கத் திறன், எந்த கால்நடைகளை பண்ணையில் வைத்திருக்க வேண்டும், எவற்றை பண்ணையிலிருந்து நீக்க வேண்டும், எந்த பராமரிப்பிற்கு செலவு அதிகம் ஆகின்றது, பண்ணை பராமரிப்பில் எதில் கவனம் செலுத்த வேண்டும் போன்ற பல தகவல்களை பதிவேடுகள் மூலம் விவசாயிகள் எளிதில் அடையாளம் காண முடியும்.

**2. மரபியல் தேர்வு**

அதிக உடல் எடை, அதிக குட்டிகளை ஈனும் திறன், அதிக பால் உற்பத்தி, சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி போன்ற உயர்ந்த மரபியல் பண்புகளைப் பதிவேடுகளில் பதிவு செய்வதன் மூலம் உயர்ந்த மரபியல் பண்புகளைக் கொண்டுள்ள கால்நடைகளை பதிவேடுகள் கொண்டு அடையாளம் காண முடியும். அதனால் பண்ணையில் விவசாயிகள் தேர்ந்த மற்றும் சிறந்த இனப்பெருக்க முறை மூலம் பண்ணையின் ஒட்டு மொத்த தரம் மற்றும் உற்பத்தித்திறனை அடுத் தடுத்த தலைமுறைகளில் படிப்படியாக மேம்படுத்த உதவுகிறது.

**3. பண்ணையின் சுகாதார மேலாண்மை**

நோய்கள் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கு பதிவேடுகளைக் கண்காணிப்பது அவசியம். வழக்கமான சுகாதார பரிசோதனைகள், தடுப்பூசிகள், குடற்புழு நீக்க அட்டவணைகள் மற்றும் சிகிச்சை முறைகள் பதிவுகள் மூலம் கண்காணிக்கப்படுவதால் பதிவேடுகளின் அடிப்படையில் சரியான நேரத்தில் தகுந்த பராமரிப்பு மூலம் கால்நடைகளில் நோய்கள் பரவுவதைத் தடுத்து அவற்றின் கால்நடைகளின் ஆரோக்கியத்தைக் காக்கலாம். மேலும் உற்பத்தி இழப்பையும் பொருளாதார இழப்பையும் குறைக்கலாம்.

**4. ஊட்டச்சத்து மேலாண்மை**

கால்நடைகளின் ஊட்டச்சத்து தேவைகளை திறம்பட நிர்வகிப்பதற்கு பதிவேடுகள் உதவுகின்றன. தீவன நுகர்வைக் கண்காணிப்பதன் மூலம், கால்நடைகளின் வளர்ச்சி, பால் உற்பத்தி அல்லது எடை அதிகரிப்பு ஆகியவற்றை மேம்படுத்தவும், கால்நடைகளின் உற்பத்தி இலக்குகளுக்குத் தகுந்தவாறும் தீவன மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிக்கவும் உதவி செய்கின்றன.

**5. நிதி மேலாண்மை**

நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடலுக்கு பதிவேடுகள் இன்றி யமையாதவை. தீவனச் செலவுகள், மருந்துச் செலவுகள் மற்றும் இதர பண்ணைப் பராமரிப்புச் செலவுகள் உள்ளிட்ட கால்நடை வளர்ப்புடன் தொடர்புடைய செலவுகள் பற்றிய நுண்ணறிவை பதிவேடுகள் வழங்குகின்றன. பண்ணையாளர்கள் வரவு செலவுப் பதிவேடுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், பண ஒதுக்கீடு, விலை நிர்ணய உத்திகள், ஒட்டு மொத்த இலாபம் மற்றும் பண்ணையில் செலவினைக் குறைத்து அதிக இலாபம் பெற பண்ணை பராமரிப்பில் எதில் கவனம் செலுத்த வேண்டும் போன்ற முக்கியமான முடிவுகளை எடுக்க முடியும்.

**6. இடர் மேலாண்மை**

இடர் மேலாண்மைக்கான மிக முக்கிய கருவியாக பதிவேடுகள் செயல்படுகின்றன. பதிவேடுகள் நோய்க் கிளர்ச்சி ஏற்படும் மாதங்கள், சந்தை ஏற்ற இறக்கங்கள் அல்லது சுற்றுச்சூழல் சவால்கள் போன்ற சாத்தியமான இடர்பாடுகளைக் கண்டறிந்து தக்க சமயத்தில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அபாயங் களை விவசாயிகள் எதிர்பார்க்கவும் குறைக்கவும் உதவுகின்றன.

சுருக்கமாக, ஒரு கால்நடைப் பண்ணையின் வெற்றி மற்றும் நிலைத்தன்மைக்கு பதிவேடுகள் பராமரிப்பு இன்றியமையாததாகும். இது விவசாயிகளுக்கு பண்ணையின் வெற்றிக்கு உகந்த முடிவுகளை எடுக்கவும், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், கால்நடைகளின் நலத்தை உறுதிப்படுத்தவும், நோய் பாதிப்பினை தவிர்க்கவும், திடீர் அபாயங்களை நிர்வகிக்கவும், சந்தைப் போட்டித்தன்மையை அதிகரிக்கவும் உதவுகின்றன. அதனால் பண்ணையாளர்கள் தத்தம் வசதிக்கேற்றாற் போல் பல்வேறு பதிவேடுகளைப் பராமரிப்பது முக்கியமாகின்றது.

தகவல் : **டாக்டர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**

# குரால்நத்தம் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கு ராபி பருவம் பயிற்சி!

சேலம், நவ.26

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், வேளாண்மைத் துறை மூலம் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ் ராபி பருவத்திற் கான பயிர் சாகுபடி பயிற்சி நடைபெற்றது. அட்மா திட்ட தலைவர் சந்திரசேகரன் தலைமையுரை வழங்கினார்.

பயிற்சியில் சாகுல் அமீத், வேளாண்மை உதவி இயக்குநர், பனமரத்துப்பட்டி முன்னிலை வகித்து வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும், நெல் பயிரியில் பூச்சி நோய் மேலாண்மை குறித்தும், சோளம் சாகுபடி தொழில்நுட்பம், பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி கூறினார். முனைவர் சந்திரசேகரன், (மண்ணியியல் துறை) வேளாண் அறிவியல் நிலையம், சந்தியூர், கலந்து கொண்டு ராபி பருவ பயிர் சாகுபடி தொழில் நுட்பம் பற்றி பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் சின்னதுரை, உதவி வேளாண்மை அலுவலர் (பொ) கலந்து கொண்டு, கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி, பயறு வகை சாகுபடி, தொழில்நுட்பம் பற்றியும் விவசாயிகளுக்கு கூறப்பட்டது. சுமித்ரா, வட்டார தொழில்நுட்ப மேலாளர், கலந்து கொண்டு அட்மா திட்டம் பற்றியும் உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். மேலும் பயிற்சியில் செந்தில்குமார், தோட்டக்கலை உதவி அலுவலர் கலந்து கொண்டு தோட்டக்கலை துறை மூலம் செயல் படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா நன்றியுரை கூறினார். பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கற்றாழை மற்றும் நெல்லிக்காய் சாறு மனித ஆரோக்கியத்தில் ஏற்படுத்தும் தாக்கம் – ஒரு பார்வை

இயற்கை மருத்துவம் மற்றும் ஆரோக்கிய உணவுகளில், கற்றாழை (Aloe vera) மற்றும் நெல்லிக்காய் (Amla) ஆகிய இரண்டு மூலிகைகள் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இவை இரண்டும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாரம்பரிய மருத்துவ முறைகளில் (சித்தம், ஆயுர்வேதம், யூனானி) பயன்பட்டு வருகின்றன. இன்றைய காலகட்டத்திலும் இவை ஆரோக்கியத்தை பேணுவதிலும், நோய்களைத் தடுக்கவும், உடல் சக்தியை வளர்த்துக் கொள்ளவும் பெரும் பங்காற்றுகின்றன.



**1. கற்றாழை (Aloe vera)**

கற்றாழை என்பது ஒரு சக்கை நிறைந்த மூலிகை தாவரம். இதில் 75க்கும் மேற்பட்ட உயிரியல் செயற்பாட்டு பொருட்கள் (bioactive compounds) உள்ளன. இதன் சாறு உடல் குளிர்ச்சி, செரிமானம் மற்றும் தோல் பராமரிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**2. நெல்லிக்காய் (Amla)**

நெல்லிக்காய் வைட்டமின் சி மிகுந்த தாவரமாகும். மேலும் இதுவொரு சக்திவாய்ந்த ஆன்டிஆக்சிடன்ட்டாகும். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது மற்றும் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மேம்படுகிறது.

**ஊட்டச்சத்து அமைப்பு**

**கற்றாழை சாறு**

- வைட்டமின் ஏ, சி, இ, பி12
- கால்சியம், சோடியம், மக்னீசியம்
- அமினோ அமிலங்கள் மற்றும் என்சைம்கள்

**நெல்லிக்காய் சாறு**

- வைட்டமின் சி அதிக அளவில்
- இரும்பு, பாஸ்பரஸ், கால்சியம்
- பாலிபீனால்கள் மற்றும் பிளேவனாய்ட்கள்

**கற்றாழையின் ஆரோக்கிய நன்மைகள்**

● **செரிமானத்திற்கு உதவுகிறது :** குடல் இயக்கத்தை ஒழுங்கு படுத்துகிறது, மலச்சிக்கலைத் தடுக்கிறது.

● **தோல் ஆரோக்கியம் :** புண்கள், கரும்புள்ளி, முகப்பரு போன்ற தோல் பிரச்சினைகளுக்கு நிவாரணம் தருகிறது.

● **நோய் எதிர்ப்பு சக்தி :** ஆன்டிஆக்சிடன்ட்கள் உடல் நச்சுக்களை நீக்க உதவுகிறது.

● **சர்க்கரை நோய்க்கு :** கற்றாழை இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது.

● **காயம் ஆற்றல் :** காயங்களை விரைவாக ஆற்றும் இயற்கை மருந்தாக பயன்படுகிறது.

**நெல்லிக்காய் சாறின் ஆரோக்கிய நன்மைகள்**

● **நோய் எதிர்ப்பு திறன் :** அதிகமான வைட்டமின் சி உடலின் பாதுகாப்புத் திறனை அதிகரிக்கிறது.

● **இதய ஆரோக்கியம் :** இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பு அளவை கட்டுப்படுத்துகிறது.

● **மூளை செயல்பாடு :** நெல்லிக்காய் நினைவாற்றலை மேம்படுத்துகிறது.

● **முடி மற்றும் தோல் :** முடி உதிர்தல் குறைகிறது, தலையசை பராமரிப்பு மேம்படுகிறது.

● **அழற்சி எதிர்ப்பு :** உடலில் உள்ள அழற்சியை குறைக்க உதவுகிறது.

**கற்றாழை மற்றும் நெல்லிக்காய் சேர்க்கை சாறின் சிறப்புகள்**

● இரண்டும் சேர்ந்து உட்கொள்ளும்போது உடலுக்கு இரட்டிப்பு நன்மைகள் கிடைக்கும்.

● உடல் சுத்தம் மற்றும் நச்சு நீக்கம்

● சக்தி மற்றும் நோய் எதிர்ப்பு திறன் மேம்பாடு

● செரிமானம் மற்றும் இரத்த சுழற்சி ஒழுங்குபடுத்தல்

● தோல் காந்தம் மற்றும் முடி வலிமை அதிகரித்தல்

**மருத்துவ பயன்பாடுகள்**

● சித்த மருத்துவம் மற்றும் ஆயுர்வேதம் இரண்டிலும் இவை பல நோய்களுக்கு மருந்தாக பயன்படுகின்றன.

● கற்றாழை – வயிற்று புண், தோல் நோய், மலம் கடினம்.

● நெல்லிக்காய் – காய்ச்சல், இரத்த சோகை, கண் ஆரோக்கியம், சிறுநீரக பிரச்சினைகள்.

**பொருளாதார மற்றும் சமூக தாக்கம்**



இன்றைய காலத்தில் கற்றாழை மற்றும் நெல்லிக்காய் உற்பத்தி சிறு தொழில்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. சாறு, ஜாம், ஹெர்பல் டிரிங்க், சாம்பு, கிரீம் போன்ற பல மதிப்பூட்டிய பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் கிராமப்புற மக்களுக்கு வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாகின்றது.

**சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள்**

● சரியான சாறு எடுக்கும் தொழில்நுட்பம் பற்றிய குறைபாடு.

● போலியான தயாரிப்புகள் சந்தையில் அதிகம்.

● சேமிப்பு மற்றும் காப்பாற்றும் பிரச்சினைகள்.

● ஹெர்பல் பொருட்களின் உலகளாவிய தேவை அதிகரித்து வருகிறது.

● இயற்கை மருந்துகள் மற்றும் ஆரோக்கிய பானங்கள் பிரபலமடைந்துள்ளன.

● அரசு மற்றும் தனியார் துறைகள் மூலம் சிறு அளவிலான உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது.

கற்றாழை மற்றும் நெல்லிக்காய் சாறுகள் இயற்கையின் அரிய பரிசுகளாகும். இவை உடல்நலத்தை மேம்படுத்தி, நோய்களைத் தடுக்க உதவுகின்றன. இரண்டையும் இணைத்து தினசரி உணவில் சேர்த்துக் கொள்வது ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கும். இயற்கை மருத்துவத்தின் முக்கிய கூறுகளாகவும், பொருளாதார வளர்ச்சிக்கும் இவை பெரிய பங்களிப்பு வழங்குகின்றன.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா, ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி. நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**